Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 20

வெள்ளிக்கிழமை 16 டிசெம்பர் 2022

மார்கழி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

அனைத்துப் பாடசாலைகளிலும்

# முப்படையினர் உதவியுடன் போதைக்கு எதிராகப் போர்

## ஜனவரி முதல் ஆரம்பம்

**கொழும்பு, டிசெம்பர் 16**

**முப்படையினரின் உதவியைப் பெற்று, ஜனவரி மாதம் 2ஆம் திகதிமுதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் போதைக்கு எதிராகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.**

»11





யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம்
தெல்லிப்பழை பிரதேச செயலகம்

## உற்பத்தித்திறன் போட்டி: தேசியத்தில் முதலிடம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தேசிய ரீதியில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும், தெல்லிப்பழை பிரதேச செயலகமும் முதலிடம் பிடித்தன.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் அரச திணைக்களங்களுக்கு இடையே 2020ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட தேசிய உற்பத்தித்

»09

வடக்கு நெற்பயிர்களில்

## மடிச்சுக்கட்டியின் தாக்கம் தீவிரம்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடமாகாண நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் தீவிரமாக அதிகரித்துள்ளது என்றும் விவசாயிகள் இது தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் இருக்கவேண்டும் என்றும் வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா

»11

## அரசமைப்புப் பேரவைக்கு கூட்டமைப்பை அழைக்குக

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 16

அரசமைப்புப் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பிரதிநிதித்துவத்தை உடனடியாக வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்தார்.

பன்முகத்தன்மையின் அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்துவதற்குத் தான் ஒரு

»11

கூட்டமைப்பிலுள்ள

## பங்காளிகளுடன் பேசியே தனித்தனியாகப் போட்டி!

சுமந்திரன் மீண்டும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

உள்ளூராட்சித் தேர்தல் நெருங்குகின்ற நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் சில இடங்களில் தனித்தனியாகவும் சில இடங்களில் கூட்டாகவுமே போட்டியிடும்.

»11

## மின்வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் இறப்பு

வவுனியா, டிசெ. 16

வவுனியா எல்லைப் பகுதியான ஹொரவபொத்தானையில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

»09

## போதை மாத்திரைகளுடன் பெண்ணொருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 16

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலங்காடு பகுதியில் 79 போதை மாத்திரைகளுடன் 49 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

»09

## மாணவனின் வாயில் நெருப்பால் சூடு!

முன்பள்ளி ஆசிரியரின் கொடூரமான தண்டனை

யாழ்ப்பாணம், டிசெ. 16

வட்டுக்கோட்டைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 4 வயதான முன்பள்ளி மாணவனின் வாயில் முன்பள்ளி ஆசிரியரொருவர் நெருப்புக்குச்சியால் சூடு வைத்துள்ளார். இது தொடர்பில் வட்டுக்கோட்டை

»09

## விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்., டிசெ. 16

வட்டுக்கோட்டைச் சந்திக்கு அருகே இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். அராலி மத்தியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு படுகாய

»11

## கசிப்புக் காய்ச்சியோர் பொலிஸார் மீது கல்லெறி

பொறுப்பதிகாரி காயம்: சந்தேகநபர்கள் ஓட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெற்றதாகச் சொல்லப்பட்ட இடத்தை பொலிஸார் முற்றுகையிட முனைந்தபோது பொலிஸாரை கத்தியால் வெட்டுவதற்கு முனைந்ததுடன், அவர்கள் மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: - வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்

»11

## வீதி விபத்தில் முதியவர் பலி!

முல்லை., டிசெ. 16

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி

»09

## மகளை வன்புணர்ந்தவருக்கு 15 வருடக் கடூழியச் சிறை!

வவுனியா, டிசெ. 16

போதையில், மகளை வன்புணர்ந்த நபருக்கு 15 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

2015ஆம் ஆண்டு முற்பகுதி

»09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்று அவசரநிலை தளர்வு!

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16
கொரோனாத் தொற்று வைரஸ் அடுத்த ஆண்டில் அவசரநிலையாகக் கருதப்படாது. அதுதொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாலில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
சீனாவின் வுஹான் மாகாணத்தில் கொரோனாத் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்டது.
கடந்த 2020 ஆம் ஆண்டு உல களவில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அவசர நிலையாகவும் பெருந் தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.
கொரோனாத் தொற்றிலிருந்து மீள்வதற்கு பல்வேறு நாடுகளும் இறுக்கமான சுகாதாரக் கட்டுப்பாடு களை விதித்தன.
பின்பு வெற்றிகரமான கொரோ னாத் தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக கொரோனாத் தொற்று தீவிரம் குறைந்ததையடுத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.
எனவே, எதிர்வரும் ஆண் டில் அவசர நிலையிலிருந்து கொரோனாத் தொற்று நீக்கப் படவுள்ளது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் குறிப்பிட் டார். (ச-இ)

# அதிகரிக்கின்றது தேங்காய் விலை

கொழும்பு, டிசெ. 16
உள்ளூர் சந்தையில் தேங்காயின் விலை 9.2 வீதத்தால் உயர்வடைந்துள்ளது என தென்னை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இந்த மாதம் நடைபெற்ற இரண்டா வது தேங்காய் ஏலத்தில் ஆயிரம் தேங் காய்களின் விலை 70 ஆயிரத்து 438 ரூபாவாக அதிகரித்துள்ளது.
ஏலத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பு அதன்விலை 69ஆயிரத்து 975 ரூபாவா கக் காணப்பட்டது.
ஏலத்துக்கு விடப்பட்ட 7 லட்சத்து 22 ஆயிரத்து 163 தேங்காய்களில் 5 லட்சத் துக்கு 47 ஆயிரத்து 365 தேங்காய்கள் விற்கப்பட்டன.
ஆயினும் இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் மொத்த தேங்காய் ஏற்று மதி 4 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது. (ச-இ)

# குறைவடைந்தது சிமெந்து விலை!

கொழும்பு, டிசெ. 16
சிமெந்துப் பைக்கற் ஒன்றின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
அதன்படி சிமெந்துப் பைக்கற் ஒன் றின் விலை 225 ரூபாவால் குறைக்கப் பட்டது.
புதிய விலை 2 ஆயிரத்து 750 ரூபா வாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸாருக்கு மதுபானம் விற்பனை

## நபரொருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 16
அல்லைப்பிட்டிப் பகுதியில் சிவில் உடையில் சென்ற பொலிஸ் அலுவலர்களுக்கு மதுபானம் விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டார் என்று ஊர்காவற் றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித் தனர்.
180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய மதுபானப் போத்தலை 700 ரூபாவுக்கு விற்பனை செய்த போதே குறித்த நபர் ஊர்காவற்றுறைப் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டார்.
அதனையடுத்து கைது செய்யப்பட்ட நபருக்கு எதி ராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ஒ-14-23)

# ஜே.வி.பியின் தேர்தல் ஜுரம் காரணத்தைக் கூறிய ஊடகம்

கொழும்பு, டிசெ.16
நாடாளுமன்றத் தேர்தலை மக்கள் விடுதலை முன்னணி வலுக்கட்டாயமாகக் கோருவதற்கான காரணத்தை தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.
தற்போதைய அரசியல் களநிலைவரத்தின்படி ஐக் கிய மக்கள் சக்தி முதலாமிடத்திலும், மக்கள் விடு தலை முன்னணி (ஜே.வி.பி.) இரண்டாமிடத்திலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ('மொட்டு'க் கட்சி) மூன்றாமிடத்திலும் உள்ளன.
ஜே.வி.பி. இரண்டாமிடத்தில் இருந்தாலும்கூட ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஜே.வி.பிக்குமான இடைவெளி அதிகம் என்பதால் உள்ளூராட்சி சபைத் தேர்தலைவிட நாடாளுமன்றத் தேர்தலே பொருத்தமாக இருக்கும் எனக் கருதி கணக்குப் போட்டு நாடாளுமன்றத் தேர்தலை ஜே.வி.பி. கோரி வருகின்றது என்று தென்னிலங்கை ஊடகத்தின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-22)

# எந்தக் கவலையும் இல்லாதவர் ரணில் ஒருவர் மட்டும்தானாம்


## சுற்றுலாத்துறை அமைச்சர் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ.16
தேர்தல் பற்றியும் கட்சி பற்றியும் கவலைப்படாத ஒருவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று சுற்று லாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.
'இப்போதுள்ள அரசியல் தலைவர்கள் மக்களின் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து வைத்துள்ளார் களா?' என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக் கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இல்லை! புரிந்து வைத்திருந்தால் இந்தக் கஷ்டமான காலத்தில் தேர்தல் ஒன்றைக் கேட்டு நிற்கமாட்டார் கள். மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு மலராது. நாட்டின் தற்போதைய நிலைமையின்கீழ் எந்தக் கட்சி தேர்தலில் வென்றாலும் அவர்களால் 13 ஐ பெறமுடியாது.
மக்களின் பிரச்சினைகள் அப்படியே இருக்க இவர் கள் எல்லோரும் தேர்தலை நோக்கியே பயணிக்கின் றனர். எரிபொருள் உள்ளிட்ட பிரச்சினை ஓரளவு சரி வந்ததும் அதை வைத்துக்கொண்டு உடனே தேர்தலுக்குப் போவதற்கு முயற்சி செய்கின்றனர்.
எல்லோரும் தேர்தல் தேர்தல் என்றே நிற்கின் றனர். ஆனால், தேர்தல் பற்றியும் கட்சி பற்றியும் கவலைப்படாத ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் - என்றார். (எ-22)

# பலே திட்டம் தீட்டிய பஸில்; நந்தியாகப் புகுந்த ரணில்!


## பகிரங்கப்படுத்துகிறார் கம்மன்பில

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற் குப் பதிலாக அந்த நெருக்கடியை மேலும் பெரிதாக்குவதற்கே பஸில் ராஜபக்ச நடவடிக்கை எடுத்திருந்தார்.
கோத்தாவை விரட்டி நாடாளுமன்றம் ஊடாகத் தான் ஜனாதிபதியாகும் திட் டத்திலேயே பஸில் செயற்பட்டார்.
இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான உதய கம்மன்பில தெரி வித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது:-
கோத்தாபயவின் ஆட்சியில் தோன் றிய பொருளாதார நெருக்கடி உக்கிர மடையாமல் தடுப்பதற்குப் போதுமான வாய்ப்பு இருந்தது. ஆனால், பஸில் அவ்வாறு செய்யவில்லை. நிலைமை யைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதற்கு அவர் திட்டம் தீட்டினார்.
பொருளாதார நெருக்கடி உக்கிர மடைந்து கோத்தா பதவியை விட்டு ஓடினால் நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாகும் திட்டம் ஒன்றை பஸில் வகுத்திருந்தார். அதற்காகவே இரசாயனப் பசளைக்கான தடைக்கு அவர் அனுமதி வழங்கினார். இரசா யனப் பசளைக்கான தடை எந்தளவு விளைவை நாட்டில் ஏற்படுத்தும் என்று தெரிந்தும்கூட பஸில் அதற்கு அனுமதி வழங்கினார்.
அதேபோல், எரிபொருள் நெருக்கடி வந்தபோது 14 மணிநேர மின்வெட் டுக்கு பஸில் அனுமதி வழங்கினார்.
இவை அனைத்தும் நாட்டில் பெரும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தும். அதனூடாகக் கோத்தா பதவியை விட்டு ஓடுவார் என்று பஸில் அறிந்து வைத்திருந்தார்.
அப்படி நடந்தால் நாடாளுமன்றத் தின் ஊடாக ஜனாதிபதியாவதுதான் பஸிலின் திட்டம். ஆனால், இடையில்



வந்து ரணில் விக்கிரமசிங்க புகுந்துகொண்டதால் எல்லாம் பிழைத்துவிட்டது - என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட

## 180 கிலோ கஞ்சா குருநகரில் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 16

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட 180 கிலோ கஞ்சா யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்று வியாழக் கிழமை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குருநகர் கடலில் கடற்படையினரால் முன்னெடுக்கப் பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன எனக் கடற் படையினர் தெரிவித்தனர்.

கஞ்சாவைக் கடத்திவந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை விசா ரணைகளின் பின் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள் ளனர். (ச-20)

## மதில் பாயும் ஆசிரியர் வளவாளரானது எப்படி?

### இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்ப்பாணம் வலய பாடசாலை ஒன்றில் பாடசாலை நேரத்தில் மதில் பாய்ந்து வீடு செல்லும் ஆசிரியர் ஒருவரை தீவகப் பகுதியில் எவ்வாறு வளவாளராக நியமித்தீர்கள்? என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் வட மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை வட மாகாண ஆளு நர் செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற கவன வீர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஆளுநரின் செய லாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் பாடசாலை நேரங்களில் மதில் பாய்ந்து வீட்டுக்குச் செல்லும் ஆசிரியர் தொடர்பில் ஏற்கனவே பல முறைப்பாடுகளை கல்வி அமைச்சுக்கு வழங்கியி ருந்தோம். அந்த ஆசிரியர் மீது ஒழுக்காற்று விசா ரணைகள் எவையும் இடம்பெறாத நிலையில் தீவக வலயத்துக்கு வளவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இல் லாத ஒருவர் ஒரு வலயத்தின் ஆசிரிய வளவாளராக நியமிப்பதற்கு அனுமதி வழங்கியது யார்? - என்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், பல ஆசிரியர்கள் பாடசாலையில் வெற்றிலை போடுகின்றனர் என்று எமக்குப் பல முறைப்பாடுகள் வருகிறன. ஆசிரியர் களின் ஒழுக்கம் தொடர்பில் ஆசிரியர் சங்கங்கள் தான் வழிப்படுத்தவேண்டும் - என்றார். (எ-20)

## திருமறைக் கலாமன்றத்தின் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், டிசெ. 16

திருமறைக் கலாமன்றம் நடத்தும் "திருமகனே தாலேலோ" என்னும் கிறிஸ்து பிறப்பு சிறப்பு நிகழ்வு கள், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4. மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட் ணம் அடிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். எனவே நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஒ-14)

# போதைப் பாவனையால் துர்மாற்றங்கள் ஏற்பட்டன

### மீண்ட மாணவர்கள் வெளிப்படுத்தல்

கொழும்பு, டிசெ. 16

போதைப்பொருள் பாவனையால் உடல்மெலிந்து சோர்வுடன் எந்தவிதச் செயற்பாடு களிலும் ஈடுபடமுடியாதிருந்ததுடன் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன. பசி, தூக்கம் எவையுமின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொண்ட ஆய்வில் கொழும்பிலுள்ள பாடசாலை யொன்றில் ஐஸ்போதைப் பாவனையிலிருந்து மீண்ட மாணவர்கள் தங்களுக்கு நேர்ந்த துர்மாற்றங்களை வெளிப்படுத்தினர்.

நிகழ்வொன்றுக்கு சென்றபோதே எனது நண்பர்கள் ஊடாக முதலில் பாவித்தோம். பின்னர் பாடசா லைக்குச் செல்லும்போதும் முடிந்து வெளியே வரும்போதும் பணம் கொடுத்தால் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தினமும் கொண்டு வந்து தருவார்கள்.

இதனை எங்களால் நிறுத்த முடிய வில்லை. இந்தப் பழக்கத்தினால் கல்வி கற்க முடியவில்லை. பசி, தூக்கம், எதுவுமில்லை. சிறிது காலத்தில் உடல் மெலிந்து சோர்வு நிலை உருவாகியது. இந்தப் பழக்கம் இந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என நாம் முதலில் எண்ணவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - போதைப் பாவ னைக்கு அடிமையானவர்களுக்கு உடல் அரிப்பு, வறண்ட வாய், அதிக வியர்வை, விரைவான இருதயத் துடிப்பு மற்றும் விரை வான சுவாசம் மற்றும் பசியின்மை ஏற்படுவதுடன் பக்கவாதம் அல் லது மாரடைப்பு ஏற்பட்டு உயிரி ழக்க நேரிடும்.

பெற்றோர் மாணவர்களின் செயற் பாடுகளில் விழிப்புடன் இருக்க வேண்டும். அவை கண்டறியப்பட் டால் உடனடியாக சிகிச்சை வழங்கு வதினூடாக முழுமையாகக் குண மடைய செய்ய முடியும் என மருத் துவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-இ)



## தாக்குதலில் காயமடைந்தோரை ஏற்றிய அம்புலன்ஸ் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

பருத்தித்துறை - அல்வாய் வடக்குப் பகுதியில் நோயாளர்காவு வண்டி மீது நேற்றுமுன்தினம் புதன் கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது என்று பருத்தித்து றைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் வடக்குப் பகுதியில் இரு வன்முறை கும் பல்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் இரவுத் தாக் குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டியில் மருத்துவமனைக்குக்கொண்டு செல்லப்பட்டனர். அதன்போதே நோயாளர் காவு வண்டியை வழிமறித்த வன்முறைக் கும்பல் வண்டி மீது தாக்குதல் நடத்தியதுடன், வண்டியிலிருந்த உயிர் காப்புப் பணியாளர்களையும் கடுமையாக அச்சுறுத் தியுள்ளனர். எனினும் நோயாளர் காவு வண்டி அங்கி ருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகவே பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,27)

## மத்தியஸ்தர் சபை அமர்வு சனிக்கிழமை இடம்பெறும்

சாவகச்சேரி, டிசெ. 16

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வுகள் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கிறிஸ் மஸ் பண்டிகை ஆகியவற்றை முன்னிட்டு சனிக்கிழ மைகளில் நடைபெறும் என்று தவிசாளர் வை. இராச ரத்தினம் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை புலமைப்பரிசில் பரீட்சையும் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையும் நடைபெறவுள்ளதால், அதற்கான அமர்வுகள் நாளை சனிக்கிழமை மற்றும் 24 ஆம் திகதி சனிக்கிழமைகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14.9)

## மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்த குழு நியமிப்பு

சாவகச்சேரி, டிசெ. 16

மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. இதற்கான கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது பிரதேசத்திலுள்ள அனைத்து மாற்றுத்திற னாளிகளையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (ச-9)

## உரம் ஏற்றுவதாகக் கூறி பணம் பறித்த ஆசாமி

### நாவற்குழியில் சம்பவம்

சாவகச்சேரி, டிசெ. 16

உரம் ஏற்றுவதற்காக ஓட்டோவை வாட கைக்கு அமர்த்திய நபரொருவர் 20 ஆயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டு தலை மறைவாகியுள்ளார் என ஓட்டோச் சாரதி ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நாவற்குழியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- பேருந்திலிருந்து இறங்கிய குறித்த நபர் அங்கு தரிப்பிடத்தில் நின்ற ஓட்டோச் சார தியை பூநகரிக்கு உரம் ஏற்றுவதற்கு வாட கைக்கு அமர்த்தினார்.

அதற்கென இளவாலையிலுள்ள கடை யொன்றுக்கு உரத்தை கொள்வனவு செய்ய சென்ற நிலையில் பணம் போதாமையாக உள்ளது, பூநகரிக்குச் சென்றதும் திருப்பித் தருவதாகக் கூறி ஓட்டோச் சாரதியிடம் 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் உரம் நனையாதிருக்க அருகிலுள்ள கடையில் பொலித்தீன் வாங்கி வருமாறு சாரதியைக் கேட்டுள்ளார். சாரதி பொலித்தீனை வாங்கிவிட்டு வந்து பார்த்தபோது வாட கைக்கு அமர்த்தியவரைக் காணவில்லை.

20ஆயிரம் ரூபா பணம் மற்றும் நாவற்குழியிலி ருந்து இளவாலைக்கு சென்ற ஓட்டோ வாட கைப் பணம் ஆகியவற்றை இழந்த நிலையில் ஓட்டோச் சாரதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம் பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (ச-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**பிள்ளையார் கதை**

பொறுப்புணர்ந்து ஔவைக்குயர் பேறளித்தாய் கணநாதா
புலுட்டையன் பதிவாசா எமைப்பாராய் - அருள்விழியால்
பார்த்திடவெம் தொல்வினைகள் பறந்தோடிப் போய்மறையும்
சேர்ந்திடுமுன் பொற்பாதம் தாண் -முருகு

# சாவகச்சேரியில் எட்டு அடி முதலை

சாவகச்சேரி, டிசெ. 16

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியிலுள்ள பகுதிக்குள் முதலை ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை நுழைந்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

குறித்த பகுதியிலுள்ள காணிக்குள் இரவுவேளை நுழைந்த முதலை அங்கு நின்ற நாயைப் பிடித்துள்ளது. நாயின் குரைப்பொலி கேட்டு மின்விளக்குகளை ஒளிரவிட்டு வெளியே வந்த வீட்டுக்காரர், முதலை நாயை விழுங்கிய நிலையில் ஆடு ஒன்றையும் பிடிக்க முற்பட்டதை அவதானித்துள்ளார். அதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் முதலை பிடித்துக் கட்டப்பட்டது. அதன்பின்னர் பொலிஸார் ஊடாக வனஜீவராசிகள் திணைக்களத்திடம் முதலை ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

### தேசிய நீர் வழங்கல்சபை

# வடபிராந்திய தொழிற்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் வட பிராந்திய ஊழியர் தொழிற்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இயக்கச்சியிலுள்ள ரீச்சா இயற்கை பண்ணையில் இடம்பெற்றது.

இதன்போது தொழிற்சங்கத்தின் புதிய தலைவராக வி. கருணதாசன், செயலாளராக எஸ். முகுந்தன்,பொருளாளராக திருமதி கார்த்திகா சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.சங்கத்தின் மாவட்ட ரீதியிலான நிர்வாக சபை உறுப்பினர்களாக ஜனனு ஜனன் சந், ரி.விஜயராகவன் எஸ். சுகந்தன், எந்திரி. நா. இளஞ்செழியன் மற்றும் எஸ். சிவகுமார் ஆகியோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.



**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.



**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.



**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.



**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.



**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சி தரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.



**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.



**மகரம்:** புதியமுயற்சிகளும்இன்றைக்கு வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.



**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச்செயற்படுவார்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.



**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

# இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலமா? அல்லியா?

### ஆராய நிபுணர் குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 15

இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா? அல்லது நீலோற்பலமா? என்பது தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சரியான தேசிய மலரைத் தீர்மானிப்பதற்கு நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையின் மூத்த பேராசிரியர் தீப்தி யகந்தாவல மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்டமுகாமைத்துவப் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கபில யகந்தாவல ஆகியோர், பல ஆண்டுகளாகத் தீர்மானம் எடுக்கப்படாது சர்ச்சையில் காணப்படும் இலங்கையின் தேசிய மலர் குறித்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டினர்.

1986ஆம் ஆண்டு தேசிய மலர் நீலோற்பலம் என உத்தியோகபூர்வமாக அமைச்சரவைப் பத்திரம் மூலம் அறிவிக்கப்பட்டபோதும் நீலோற்பலத்தை சித்திரிக்கும் விதத்தில் ஊதா நிறம் சார்ந்த அல்லி மலரின் புகைப்படமே பயன்படுத்தப் படுகிறது என்றும், இது உண்மையான நீலோற்பலம் இல்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய பேராசிரியர் உள்ளிட்ட குழுவினரால் 2015 ஆம் ஆண்டு தேசிய மலர் குறித்த சரியான படம் உள்ளடக்கப்பட்டு இலங்கையின் தேசிய மலரின் சிங்களப் பெயர் மானல் மலர் (அல்லி)என்றும், ஆங்கில மொழியில் புளூ வோட்டர் லில்லி என்றும் தமிழில் நீலோற்பலம் என்றும் அறிவிக்கப்பட்டது.

அல்லி என்பது ஒரு பொதுவான பெயர் எனவும், இலங்கையில் ஊதா நிற அல்லிகள், வெள்ளை அல்லிகள், நீல அல்லிகள் எனப் பல வகையான அல்லிகள் இருப்பதால், இலங்கையின் தேசிய மலராக நீலோற்பல மலரைத் தெரிவு செய்யவேண்டும் .

இதேவேளை - முத்திரைப் பணியகம் நீலோற்பலம் மலருக்குப் பதிலாக தவறான அல்லி மலரின் படத்தையே வெளியிட்டுள்ளது. பாடப் புத்தகங்களிலும் தவறான மலரின் படமே உள்ளது என இரு பேராசிரியர்களும் சுட்டிக்காட்டினர்.

சிங்கள மொழியில் புலமைபெற்ற பேராசிரியர் விமல் ஜீ. பலகல்லவின் நிலைப்பாட்டுக்கமையவே நீலோற்பலம் என்ற பெயருக்குப் பதிலாக தேசிய மலராக மானல் (அல்லி) எனப் பெயரிடப்பட்டுள்ளது. அல்லி என்பது உன்னதமான நீலமலர் என்பதையே குறிக்கிறது என சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். இதற்கு இலங்கையின் தேசிய மலர் அல்லி மலரா? அல்லது நீலோற்பலமா? என்பது தொடர்பில் பரிசீலித்து பரிந்துரைகளை வழங்குவதற்கும் சரியான தேசிய மலரைத் தீர்மானிப்பதற்கும் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்படும் என சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ச)

# முல்லை. - உடையார்கட்டிலும் தேசத்தின் குரலுக்கு அஞ்சலி



கிளிநொச்சி, டிசெ. 16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் ஆ.ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோரால் திருவுருவப் படத்துக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தேசத்தின் குரலுக்கு மலரஞ்சலி செலுத்தினர். (ச-19)

# தேசத்தின் குரலுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி



கிளிநொச்சி, டிசெ. 16

தமிழ்மக்களின் சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 16ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தினார்.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் பங்குபற்றினர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கை என்பது வாய்ப்புகளால் நிரம்பியது. நாம் பயன்படுத்தும் வாய்ப்பை பொறுத்தே நம் வாழ்க்கை அமையும்."
-ஜோன் கென்னடி

## ஒருபுறம் பேச்சு மறுபுறம் அபகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் நல்லிணக்கத்துக்கான சர்வகட்சி மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. தமிழர் தரப்பு இந்த மாநாடு சாதகமாக அமைந்ததாகப் பொது வெளியில் தெரிவித்துள்ளது. தாம் முன்வைத்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்படுவதாகவும், காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக மாநாட்டில் கலந்துகொண்ட தமிழர் தரப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், இந்த மாநாட்டில் தமிழர் தரப்பால் ஒருமித்து முன்வைக்கப்பட்ட நில ஆக்கிரமிப்பு விவகாரமே, அரசாங்கத்தின் 'பேய்க்காட்டை' எடுத்துக்காட்டப்போதுமானது.

மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தருணத்தில் யாழ்ப்பாணத்தில் காரைநகரிலும், முல்லைத்தீவின் வட்டுவாகலிலும் கடற்படையினருக்கு தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மாநாடு நடைபெற்று, காணி அபகரிப்புத் தொடர்பில் அரசாங்கம் சாதகமான நடவடிக்கை எடுக்கும் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் வெளியான நாளில், வட்டுவாகலில் இரகசியமான முறையில் நில அளவீடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் மறுப்பது ராஜபக்சக்களின் யுக்தி. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அப் படிப்பட்டவர் அல்லர். தமிழர் தரப்பின் கோரிக்கைகளை மறுக்காமல் உதாசீனம் செய்யாமல், அதை நிறைவேற்றுவேன் என்று சொல்லிச் சொல்லியே காலம் கடத்தி, அதை நீர்த்துப்போகச் செய்பவர் அல்லது தமிழர் தரப்பை விரக்திக்குள்ளாக்கி – சலிப்படையச் செய்து, தமிழர் தரப்பாகவே இந்த முயற்சியிலிருந்து விலகவேண்டும் என்ற நோக்கில் செயற்படுபவர்.

முப்படையினருக்கான காணி சுவீகரிப்புத் தொடர்பில் நல்லாட்சி அரசின் காலத்திலிருந்து தமிழர் தரப்பு பேச்சு நடத்தித்தான் வருகின்றது. கோத்தாபய ஜனாதிபதியாக இருந்தபோது கூட இது நடந்திருந்தது. ஆனால், இதற்கான தீர்வு அல்லது இதனை முடிவுறுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இப்போது ஆரம்பித்துள்ள இந்த சர்வகட்சி நாடகத்திலும் இது தீர்க்கப்படாது என்பதற்கு வடக்கில் இரண்டு இடங்களில் நடைபெற்ற அல்லதுமுயற்சிக்கப்பட்ட அளவீட்டுமுன்னெடுப்புகளே சாட்சி. இலகுவான இந்த விடயத்துக்கே இவ்வாறு தமிழர் தரப்புக்கு 'அல்வா' என்றால் ஏனைய சிக்கலான விடயங்களுக்கு ரணில் எப்படி 'பெப்பே' காட்டுவார் என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.

இந்த இடத்தில் தமிழர் தரப்பு கடந்த நல்லாட்சி காலத்தில் பின்பற்றிய அணுகுமுறையைத் தவிர்க்கவேண்டும். நல்லாட்சி அரசாங்க காலத்தில், புதிய அரசமைப்பு முயற்சி குழம்பக் கூடாது என்பதற்காக, அரசாங்கத்தின் தமிழர் விரோத போக்குகளைக்கூட அம்பலப்படுத்தாமல் அதைக் கண்டும் காணாததுபோல தமிழர் தரப்பின் பிரதிநிதிகள் இருந்தனர். அவற்றை அம்பலப்படுத்தினால் புதிய அரசமைப்பு முயற்சி குழம்பிவிடும் அல்லது ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார்கள் என்பதைச் சொல்லிச் சொல்லியே, நல்லாட்சி அரசாங்கத்துக்கு தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் வெள்ளையடிப்புச் செய்தனர்.

இப்போதும் அதேபோன்று சர்வகட்சி மாநாடு ஊடான தீர்வு முயற்சிகள் குழப்பிவிடும் என்று பேசாமல் இருக்காமல், அவற்றை உடனுக்கு உடன் அம்பலப்படுத்த வேண்டும். இந்த முயற்சிகளை முளையிலேயே நிறுத்தாவிட்டால் அடுத்த கட்ட நகர்வுக்கு வரமாட்டோம் என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கவேண்டும். இல்லையேல் மீண்டும் ஒருமுறை சிங்களத் தலைமைகளின் தந்திரத்துக்கு தமிழ்த் தரப்பு இரையாக வேண்டி இருக்கும். இதை உணர்ந்து தமிழ் அரசியல்வாதிகள் பேச்சுகளில் கடும்பிடியோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.




# 13 'பிளஸ்' யோசனையால் ஒற்றையாட்சி உறுதிப்படும்

## பஸில் ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, டிசெ.16

13 பிளஸ் யோசனையால் இலங்கையின் ஒற்றையாட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பாக ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துகிறார் எனக் கூறப்படுகின்றது. ஆனால், ஒற்றையாட்சியையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏற்கின்றது. எல்லைமீறிய அதிகாரப் பகிர்வை எதிர்ப்பீர்களா? என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே பஸில் ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13 பிளஸ் என்ற யோசனையை மஹிந்த ராஜபக்சவே முதன் முதலில் முன்வைத்தார். அதன்மூலம் நாட்டின் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. சொல்லளவில் இருந்த ஒற்றையாட்சியை மஹிந்த ராஜபக்சவே நிஜமாக்கினார்.

நாட்டின் தேசியக் கொடியை எங்கு வேண்டுமானாலும் ஏற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார். ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள்ளேயே நடவடிக்கை இடம்பெறும் - என்றார். (எ-இ)

# இரும்பு சேகரிப்பு வாகனங்களில் போதைப்பொருள்கள் விற்பனை

## தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 16

இரும்பு, தகரங்கள் சேகரிக்கும் வாகனங்களில் போதைப்பொருள்கள் இரகசியமான முறையில் விற்பனை செய்யப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ஷாக்ய நாணாயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது.

இரும்பு, தகரங்களைச் சேர்த்துக்கொண்டு வரும் வாகனங்களில் இரகசியமான முறையில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே பெற்றோர் எந்நேரமும் விழிப்புடன் செயற்படவேண்டும். பிள்ளைகளின் உடல் மாற்றங்கள் தொடர்பில் பெற்றோர் தினமும் அவதானிக்கவேண்டும் - என்றார். (ச-இ)

நாளை

17.12.2022

சனிக்கிழமை

மார்கழி 02

சுபநேரம் : 03.22 - 04.52

ராகுகாலம் : 09.22 - 10.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழியின் ஊடாக போதைப்பொருள் விளம்பரம்

## மாணவர்களுக்கு குறிவைப்பு; பெற்றோரே அவதானம்

யாழ்பபாணம், டிசெ. 16

போதைப்பொருள் விளம்பரங்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்படுகிறது. மாணவர்கள் இணையவழி கற்றலை ஆரம்பித்ததன் பின்னர் இந்த நடவடிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல்நிலைய நிகழ்ச்சித் திட்ட அதிகாரி நிதர்சனா செல்லத்துரை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டில் போதைப்பொருள் தொடர்பில் தற்போது பதிவாகும் சம்பவங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக நோக்கும்போது, மாணவர்கள், இளையோர்கள் இணையவழியூடாக குறிவைக்கப்படுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள்களை விற்பனை செய்வோர் இளம்பராயத்தினரை இலக்கு வைப்பதற்கு தற்போது இணையவழியை பயன்படுத்தி தமது வியாபாரத்தை இலகுவாக்க முனைந்துள்ளனர்.

மாணவர்கள் இணையவழி கற்றலை ஆரம்பித்ததன் பின்னர் இந்த நடவடிக்கை அதிகரித்துள்ளது.

எனவே போதைப்பொருள் பாவனைக்குள் பிள்ளைகளை சிக்காது தடுப்பதற்கு இணையவழி கல்விச் செயற்பாடுகளின் போது கல்விச் சமூகம் மற்றும் பெற்றோர் அவதானமாக இருக்கவேண்டும்,

ஏனைய தரப்பினரும் போதைப் பொருள் பாவனை தொடர்பில் விஞ்ஞான ரீதியிலும் நோக்கி போதைப்பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)



## விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 16

புங்குடுதீவு சென்சேவியர் விளையாட்டுக் கழகத்தினருக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உதைபந்துகளும், புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழகத்தினருக்கு14 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உதைபந்துகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

புங்குடுதீவு உலகமையத்தின் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தால் புங்குடுதீவு உலகமையத்தின் செயலாளர் கருணாகரன் குணாளனின் நிதியுதவியில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ-14)

## காரைநகர் பிரதேசத்துக்கான கூகுள் வழித்தடம் மீள்நிர்ணயம்

### சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

காரைநகர் பிரதேசத்துக்கான கூகுள் வழித்தடத்தை மீள்நிர்ணயம் செய்வதற்கு காரை நகர் பிரதேச சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற மாதாந்த அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காரைநகர் சுற்றுலாத் தலங்களை நோக்கி சுற்றுலாவிகள் வருகை அதிகரிக்க கூகுள் வழித்தடத்தை மீள ஒருமுறை மீள்நிர்ணயம் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

அத்துடன் காரைநகர் வாழ் மக்களிடம் சோலைவரி சேகரிக்கின்ற போது ஒவ்வொரு வீட்டுக்கும் இலக்கத் தகடுகள் சபையினுடைய செலவில் வழங்கப்படுகிறது.

குறித்த தகடுகளுக்குரிய செலவுகளை மீள பொது மக்களிடம் திரட்டலின் போதும் சோலைவரியை பெறுவதற்கும் இந்த இலக்க தகடுகளையும் கூகுள் வழித்தடத்தில் இணைப்பது சிறந்தது. இதன்மூலம் எமது பிரதேச அஞ்சல் அலுவலக ஊழியர்கள், ஒன்லைன் வர்த்தகர்கள் எனப் பலரதரப்பட்டோரும் வீட்டை இலகுவில் அடையாளம் காணமுடியும் என தெரிவித்து தவிசாளர் பிரேரணையை முன்மொழிந்தார்.

சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட நிலையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக கூகுள் வழிநடத்தில் மேற்கொள்ளும் நிறுவனத்தாருடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது என தவிசாளர் குறிப்பிட்டார். (ச-125)



## கண்காட்சியும் விற்பனையும்

மன்னார், டிசெ.16

மன்னார் மாவட்டத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியும் விற்பனையும் மன்னார் மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேசசெயலகங்களில் இருந்து சுய தொழில் முயற்சி உற்பத்தியாளர்கள் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர். மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியில் பிரதேசசெயலர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மன்னாரிலுள்ள பிரதேசசெயலர் பிரிவுகளில் பயனாளிகளுக்கு விதைகள் வழங்குவதற்கு பிரதேச செயலர்களிடம் ஒரு தொகை விதைகள் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-14,213)



## யாழ்.பல்கலையில் தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவத் துறையின் 'முன்னோக்கி' செயற்றிட்டத்தின் கீழ், தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்திய தொழில் வாய்ப்பு சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம், தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 27 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றன. இதன்போது மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மற்றும் சுயவிவரக்கோவை என்பவற்றை எவ்வாறு சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வெற்றியடைவது என்பது தொடர்பான செயலமர்வும், இலங்கை ஆளணிப் பட்டய நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

தொழிற்சந்தையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேரவை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,27)

## நிர்வாகத்தெரிவு

வலி.கிழக்கு நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.விஜயமோகனராசா தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

அதன்போது புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. அதில் தலைவராக ந.சிவகுமாரன், உபதலைவராக இ.தேவராசா, செயலாளராக சி.நிமலன், உபசெயலாளராக வே.விக்னேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வை.யுவதீபன், சி.சந்திரகுமார், ச.கருணைஜீவா, அ.உதயகுமார், தி.கணேசலிங்கம், சு.மகேஸ்வரன், பொ.செந்தில்நாதன், ஐ.தவராசசிங்கம், இ.சங்கரன், ந.திலீபன், ஆ.சச்சிதானந்தம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-14,17)



தேசிய ரீதியிலான கால்பந்தாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. மூன்றாம் இடத்துக்கான இந்த ஆட்டம் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில்கல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிண்ணியா அல் அக்ஷா கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 5:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமை தொடர்பில் அதிபர்களுக்கு செயலமர்வு!




கிளிநொச்சி, டிசெ. 16

'உடல் ரீதியான தண்டனையிலிருந்து சிறுவர்களைப் பாது காத்தல்' எனும் தலைப்பில் சிறுவர் உரிமைகள் தொடர்பில் கிளிநொச்சி தெற்கு மற்றும் வடக்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கு செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செயலமர்வு நடத்தப்பட்டது.

செயலமர்வின் விரிவுரையாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் செயற்பட்டார்.

அத்துடன் கிளிநொச்சி வடக்கு, தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர்கள், கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். (ம-14,214)



தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 5 ஆயிரம் மீற்றர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முழங்காவில் மகா வித்தியாலய மாணவன் சு.கீரன் மற்றும் அவரின் பயிற்றுவிப்பாளர்கள் பாடசாலைச் சமூகத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். (ம-13)


## பெயர் மாற்றம்

கலைவாணி வீதி, வடலியடைப்பில் வசிக்கும் **நாராயணசாமி வுவன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **நாராயணசாமி குகன்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **நாராயணசாமி குகன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 48128)(3/6) நாராயணசாமி குகன்

## பெயர் மாற்றம்

டச்சுவீதி, உடுவில் சுன்னாகத்தை சேர்ந்த **பொன்னுசாமி மாலினி** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **மாலினிதேவி** என மாற்றம் செய்துள்ளேன் இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் **மாலினிதேவி** என கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 48129)(3/6) **மாலினிதேவி**


## கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி (CF) 2022

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **முதல்வர்/ ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து **19.12.2022 திகதியில் இருந்து 29.12.2022ஆம்** திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3,500.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) **தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 30.12.2022 **ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிக்குள் இடப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்..
07. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 23.12.2022 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/ CF/XIII 34/2022 | Construction of Drainage for Pungaikulam Railway crossing near Junction to Ilanthaikulam Drainage | 12.636 | CF | 77 | 17.03.2023 | 180 | C6 & C5 | 126,000.00 | 14.04.2023 |
| 2 | JMC/W D/ CF/ XIV/ 35/2022 | Improvement of lotus Veethy | 3.400 | CF | 63 | 03.03.2023 | 60 | C8 & C7 | 34,000.00 | 31.03.2023 |
| 3 | JMC/WD/ CF/ XVI/36/2022 | Construction of Arasady Road 1st Lane Canal | 2.600 | CF | 63 | 03.03.2023 | 60 | C8 & C7 | 26,000.00 | 31.03.2023 |
| 4 | JMC/W D/ CF/ XVII/ 37/2022 | Renovation of Drainage for Kachcheri Nallur road Jaffna | 4.714 | CF | 63 | 03.03.2023 | 60 | C8 & C7 | 48,000.00 | 31.03.2023 |
| 5 | JMC/W D/ CF/ XVII /38/2022 | Construction of Sivan amman Veethy to temple road drainage canal | 8.990 | CF | 77 | 17.03.2023 | 120 | C6 & C7 | 90,000.00 | 14.04.2023 |
| 6 | JMC/WD/ CF/ XVIII /39/2022 | Improvement of Interconnecting Road of Beach Road to Reclamation Road (Iraal Vaadi Road) | 1.463 | CF | 49 | 17.02.2023 | 60 | C9 & C8 | 15,000.00 | 17.03.2023 |
| 7 | JMC/W D/ CF/ XIX/40/2 022 | Renovation of Drainage for Sinnakkinathadi Road | 1.560 | CF | 49 | 17.02.2023 | 60 | C9 & C8 | 16,000.00 | 17.03.2023 |
| 8 | JMC/WD/ CF/ XX/41/2022 | Renovation of Kaathi Aboobucker Road( School front side) Culvert Work | 3.072 | CF | 63 | 03.03.2023 | 60 | C8 & C7 | 31,000.00 | 31.03.2023 |
| 9 | JMC/W D/ CF/ XXI/42/2 022 | Painting work & renovation of toilet work at Public Library | 22.34 | CF | 77 | 17.03.2023 | 180 | C6 & C5 | 224,000.00 | 14.04.2023 |
| 10 | JMC/W D/ CF/ XXII/43/ 2022 | Construction of parapet wall at Sangiliyan park – stage I | 13.00 | CF | 77 | 17.03.2023 | 120 | C6 & C5 | 130,000.00 | 14.04.2023 |

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு
மாநகர சபை, யாழ்ப்பாணம்
16.12.2022

இரட்டைக் குடியுரிமை விவகாரம்:

# சுரேன் ராகவன் மீண்டும் சிக்கலில்

கொழும்பு, டிசெ. 16

உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இரட்டைக் குடியுரிமை பெற்றவர் என்ற சர்ச்சை மீண்டும் எழுந்துள்ளது.

சமூக ஆர்வலரான ஓஷல ஹேரத் என்பவரே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். இரட்டைக் குடியுரிமை காரணமாக அவர் அரசமைப்பு ரீதியாக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தமுடியாது. தேர்தல் சட்டத்தை மீறியமைக்காக அவருக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளேன் என அவர் தெரிவித்தார். (ச-இ)



நெல்லியடி வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்ட உணவு கையாள்பவர்களுக்கு 3 நாள் பயிற்சிநெறி அண்மையில் வழங்கப்பட்டது. முதலாவது அணியில் 40 பேர் இந்தப் பயிற்சிகளை நிறைவு செய்தனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் .....

## இம் மாதம் 16 ஆம் திகதி முதல்

## நத்தார் மற்றும் புதுவருட

# ஜவுளிப் பண்டிகை

## ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்

திருமண பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
டொப், புரோக்
மற்றும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்



## நெற் சல்வார், கொட்டன் சல்வார்

## ~~5000~~/= 2000/=

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்ஷன்

**காலம் : இன்று 16.12.2022 முதல் 31.12.2022 வரை**
**இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-03 ஓடைக்கரை விதியில் ஆதன இலக்கம் 36 மனுவேற்பிள்ளை பெண் அன்னம்மா. பஸ்தியாம்பிள்ளை பெண் மேரிப்பிள்ளை என்ற பெயரிலேயே ஆதன வரிப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

பின்னர் குறித்த ஆதனத்தை அலெக்சாண்டர் வஸ்தியாம்பிள்ளை கைம்பெண் மரியம்பிள்ளையும், பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளையும் மனுவல் வால்டரும் பெண் அன்னம்மாவும். யோசேப்பு மனுவல் கைம்பெண் அன்னம்மாவும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் முகதாவில் 08.11.1960ம் திகதியிடப்பட்ட 5308ம் இலக்க சீதன உறுதிமூலம் பரிபூரணம் யோசேப் பெண் திரேசம்மாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் முகதாவில் 08.11.1960ம் திகதியிடப்பட்ட 5310ம் இலக்க பிரிவிடல் உறுதிமூலம் பரிபூரணம் யோசேப் உம் பெண் திரேசம்மாவும் சவிரியான் யோசேப் உம் பெண் செல்வநாயகி எனப்படும் மேரிமாகிறேற்றும் பிரிவிடல் செய்துள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இயூஜீன் முகதாவில் 11.11.1984ம் திகதியிடப்பட்ட 519ம் இலக்க அறுதி உறுதிமூலம் குறித்த ஆதனத்தை யோன் இராசலிங்கமும் பெண் எலிசபெத் உம் தங்களின் 2ம் பேர்வழியின் தாயார் காலஞ்சென்ற பரிபூரணம் யோசேப்பு கைம்பெண் திரேசம்மா பேரில் நொத்தாரிசு சு. இரத்தினசிங்கம் முகதாவில் 08.11.1960ம் திகதியிடப்பட்ட 5310ம் இலக்க பிரிவிடல் உறுதிமூலம் வந்த தாய்வழி முதுசம் எனக்குறிப்பிட்டு செல்லப்பா சீவரத்தினம் உம் பெண் காணிக்கைமலருக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்கள். பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இயூஜீன் மரியாம்பிள்ளை முகதாவில் 22.12.2012ம் திகதியிடப்பட்ட 853ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் செல்லப்பா சீவரத்தினம் உம் பெண் காணிக்கைமலரும் நன்கொடையாக சீவரத்தினம் ஆரோதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

ஆதன அட்டவணை. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று காரையூர் இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு"குமரன் குடியிருப்பு" நிலப்பரப்பு 00 குளி 07(குளி பூச்சியம் ஏழு) ம் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த நிலப்பரப்பு 00 குளி 07 க்கும் எல்லை

கிழக்கு - சவரியான் யோசேப்பின் ஆதனம்
வடக்கு - திரேசம்மாவின் ஆதனம்
மேற்கு - றோட்டு
தெற்கு - P.S சின்னத்துரையின் ஆதனம். இதடங்கலும் இதற்குச்சேர்ந்தவைகளும்.

தற்போது சீவரத்தினம் ஆரோதி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு அல்லது முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சீவரத்தினம் ஆரோதி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல்வர்,
யாழ்ப்பாண மாநகரசபை,

(CR 38745)(3/6)

உ
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 01.12.2022 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் திருமதி**

## செல்வராசா திலகவதி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.12.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (17.12.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

துரைகராஜ், நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.

குடும்பத்தினர்

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19 கமால் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 58/6 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது M.சின்னலெப்பையும் உரிமையாளரும் என்ற பெயரிலே ஆதனவரி பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு S.M அபூபக்கர் முகதாவில் 18.09.1940ம் திகதியிடப்பட்ட 3480ம் இலக்க அறுதி உறுதி யாழ்ப்பாணம் காணிப்பதிவாளரினால் பகுதி பழுதடைந்துவிட்டதாக வழங்கப்பட்ட உறுதிப்படுத்திய சான்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை மொகமட் மொகைடீன் அப்துல் காதர் பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 19.04.1975ம் திகதியிடப்பட்ட 219 ம் இலக்க அறுதி உறுதி மூலம் அப்துல் காதர் பாரூக்குக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அப்துல் காதர் பாரூக் பெண் உறனிஸா பிரசித்த நொத்தாரிசு R.P சபாரத்தினம் முகதாவில் 23.03.1985 ம் திகதியிடப்பட்ட 205ம் இலக்க அறுதி உறுதி மூலம் அப்துல் காதர் கைம்பெண் செய்தூன் உம்மா. அப்துல் கரீம் சாகுல் ஹமீது, அப்துல் கரீம் முஹம்மது முர்ஷித் ஆகியோருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அப்துல் காதர் கைம்பெண் செய்தூன் உம்மா பிரசித்த நொத்தாரிசு M.M மன்சூர் முகதாவில் 12.10.1985ம் திகதியிடப்பட்ட 2560 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அப்துல் ஹரீம் சாகுல் ஹமீது, அப்துல் கரீம் நூறுல் அமீன், அப்துல் ஹரீம் முகம்மது முர்ஷித் ஆகியோருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு M.M மன்சூர் முகதாவில் 02.03.1989ம் திகதியிடப்பட்ட 3475ம் இலக்க அறுதி உறுதியின் இணைப்பிரதி குறிப்பிட்ட நொத்தாரிசால் காணிப்பதிவகத்திற்கு ஒப்படைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் (யாழ்ப்பாணம் காணிப்பதிவாளரால்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு M.M மன்சூர் முகதாவில் 12.03.1989 ம் திகதியிடப்பட்ட 3488ம் இலக்க நிபந்தனை உறுதியின் இணைப்பிரதி குறிப்பிட்ட நொத்தாரிசால் காணிப்பதிவகத்திற்கு ஒப்படைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் (யாழ்ப்பாணம் காணிப்பதிவாளரால்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை செல்லையா பெண் பாலசிங்கம் பிரசித்த நொத்தாரிசு ராஜரட்ணம் முகதாவில் 28.12.2004ம் திகதியிடப்பட்ட 2688ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை செல்லையா பாலசிங்கம் பெண் நாகம்மா பிரசித்த நொத்தாரிசு A.ராஜரட்ணம் முகதாவில் 05.05.2011ம் திகதியிடப்பட்ட 7553ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சந்திரகுலம் கனகராஜா பெண் பாலேஸ்வரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை சந்திரகுலம் கனகராஜா பெண் பாலேஸ்வரி பிரசித்த நொத்தாரிசு வை.த.சிவலிங்கம் முகதாவில் 24.08.2015 ம் திகதியிடப்பட்ட 4227ம் இலக்க அறுதி உறுதி மூலம் அப்துல் கரீம் நூறுல் அமீனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அப்துல் கரீம் நூறுல் அமீன் பிரசித்த நொத்தாரிசு வை.த.சிவலிங்கம் முகதாவில் 07.05.2016 ம் திகதியிடப்பட்ட 4626ம் இலக்க அறுதி உறுதி மூலம் முகிதீன்ஜனூன் மொஹமட் அஜ்வாத்க்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற் பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவும், யாழ்ப்பாணம் மாநகர சபை பகுதியும், கிராம அலுவலர் பிரிவு இல.ஜே/98. "புங்கடி" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பி.எஸ் ஐயர் அவர்களால் 24.01.1985ம் திகதி அளந்து பிரிவிட்டு வரைந்த 1561ம் இலக்கப்படத்தின்படி நில.பர.0 குளி 16.95

இதன் எல்லைகள் :
கிழக்கு - நைனா முகமது பெண் சாபியாவுக்கும், சாகுல் கமீது பெண் றுடிக்காக்கும் உரியது.
வடக்கு - கமால் வீதி
தெற்கு - நைனா முகமட் சாபியாவியாவின் ஆதனம். இதற்குள் அடங்கிய கிணறும்
மேற்கு - நரியூதீன் பெண் பாயினாவின் ஆதனம். அதற்குள் அடங்கிய ஆதனம்.

தற்போது முகிதீன் ஜனூன் மொகமட் அஜ்வாத் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கோ அல்லது முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோரதவிடத்து குறித்த ஆதனமானது முகிதீன் ஜனூன் மொஹமட் அஜ்வாத் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(CR 38746)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராஞ்சி கடலட்டைப் பண்ணை யாழில் இன்று ஆர்ப்பாட்டம்!

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் அழைப்பு

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சி கிராஞ்சி இலவங்குடா கடலில் பாரம்பரிய தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் இதற்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி வடமாகாண ஆளுநர் செயலகத்தை சென்றடைந்து வடக்கு மாகாண ஆளுநர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மனுவொன்றையும் கையளிக்கவுள்ளது.

இதுதொடர்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

கிராஞ்சி இலவன்குடாவில் சட்டவிரோத கடலட்டை பண்ணைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து 76 நாள்களுக்கு மேலாக போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்தப் போராட்டத்தை உரிய தரப்பினர் கண்டுகொள்வதாக இல்லை.

மக்களின் விருப்புக்கு மாறாக கடலட்டை பண்ணைகளை அமைக்க முடியாது. அரசாங்கம் தனது இலாபங்களுக்காக கடலட்டை பண்ணையை முன்னுரிமைப்படுத்தி செயற்படுகிறது. இதனால் சிறிய மீனவர்கள் பழிவாங்கப்படுகின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால் பெரும் நெருக்கடி நிலை உருவாகும். எங்கள் வளங்களை சுரண்டிவிட்டு அரசியல் தீர்வு தருவதில் பயனில்லை. வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சிவில் சமூகத்தினரும் அரசியல் தரப்புகளும் பங்கேற்று இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் - என்றனர். (ச-20)

## மின்வேலியில்...

உமேஸ் லக்சன் (வயது - 25) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். விலங்குகளை வேட்டையாடுவதற்காக சென்றபோதே அந்த இளைஞர் மேற்படி மின்வேலியில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம்என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## உற்பத்தித்திறன்...

திறன் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்து மேற்படி விருதை வென்றன. பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் இருந்து யாழ். மாவட்டச் செயலர் மகேசன் தலைமையிலான குழுவினரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவஸ்ரீ தலைமையிலான குழுவினரும் விருதைப் பெற்றுக்கொண்டனர். (அ-ம)

## வீதி விபத்தில்...

விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இரத்தினம் உதயகுமார் (வயது - 54) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளுடன் இடம்பெற்ற விபத்திலேயே அவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19-113)

## போதை...

குறித்த பெண், தனது வீட்டில் போதை மாத்திரைகளை வைத்திருக்கின்றார் என்று சுன்னாகம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி கைது இடம்பெற்றது. கைதான பெண்ணிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

## மாணவனின்...

பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் தகாத வார்த்தைகளைப் பேசுகின்றான் என்று தெரிவித்தே அந்த முன்பள்ளி ஆசிரியை நெருப்புக்குச்சியால் மாணவனின் வாயில் சூடு வைத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரிடமோ அல்லது வேறு நபர்களிடமோ தெரிவிக்கக்கூடாது என்று ஆசிரியரின் உறவினர்கள் சிறுவனின் பெற்றோரை மிரட்டியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸாரின் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-ம)

## மகளை...

யில் 11 வயதுச் சிறுமியை (மகளை) குறித்த நபர் போதையில் வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றையதினம் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மகளையே பாலியல் வல்லுறவு புரிவது உலக நீதி, இயற்கை நீதி, சமூக நீதி என்ற அனைத்துக்கும் முரணான ஒரு குற்றச்செயலாகும். அத்தகைய குற்றத்தைப் புரிந்த குற்றவாளிக்குக் கடும் தண்டனை வழங்கப்படவேண்டும் என தனது தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி, அவருக்கு 15 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் எனவும் உத்தரவிட்டார். (அ-ம)

## வாளுடன் கைதான நால்வருக்கு மறியல்

வாளுடன் கைதான ஈ.பி.டி.பி உறுப்பினர் உள்ளிட்ட நால்வருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வலி.மேற்கு பிரதேசசபையின், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் உட்பட நான்கு பேர் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். இந்தநிலையில் சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-14-125)



## நகைகளைக் கையளித்த வணிகர்களுக்கு மதிப்பளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 16

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரண்டு வணிக நிலையங்களில் பொதுமக்கள் தவறவிட்ட பெறுமதியான நகைகளை உரியவர்களிடம் ஒப்படைத்த இரண்டு வணிகர்களுக்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மதிப்பளிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு வெதுப்பகமொன்றில் ஆறரைப் பவுண் தாலிக்கொடி தவறவிடப்பட்டது. அதைக் கண்டெடுத்த வெதுப்பக முகாமையாளர், தவறவிட்ட நகையை உரிமையாளரிடம் கையளித்துள்ளார். அதேவேளை புதுக்குடியிருப்பு மருதம் வாணிபத்தில் தறவிடப்பட்ட கைச்சங்கிலி ஒன்றை கடை உரிமையாளர் தவறவிட்டவரை இனங்கண்டு அடையாளத்தை உறுதிப்படுத்தி ஒப்படைத்துள்ளார். குறித்த இருவரினது நேர்மைமிக்க செயலைப் பாராட்டுமுகமாக பொலிஸாரின் ஒழுங்கமைப்பில் நினைவுப்பரிசில்கள் வாழ்த்துமடல்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-14-19)

## சட்டவிரோத மண் அகழ்வு; கோப்பாயில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 16

கோப்பாய்ப் பகுதியில் காணி உரிமையாளருக்குப் பணம் செலுத்தி அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் கிருஷ்ணன் ஆலயத்துக்குப் பின்புறமுள்ள காணியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறுகின்றது என்று கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த மண் விற்பனை நிலையமொன்றைச் சேர்ந்தோர் குறித்த காணியின் உரிமையாளருக்கு பணம் செலுத்தி அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் மற்றும் பைக்கோ வாகனத்தில் மண் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அதன்போது அங்கு சென்ற கோப்பாய் பொலிஸார், சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 32 மற்றும் 36 வயதான இரு வாகனச் சாரதிகளைக் கைது செய்தனர். எனினும் காணி உரிமையாளர் தப்பிச் சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவருக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-125)

## பிரதேசசபைகளின் புள்ளியிடலில் மன்னாரில் நானாட்டான் முதலிடம்

மன்னார், டிசெ. 16

பிரதேசசபையின் செயற்பாட்டுக்கான புள்ளியிடலில் நானாட்டான் பிரதேச சபை மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் நிதியைக்கொண்டு நானாட்டான் பிரதேச மக்களுக்கு மேலும் சேவையை விரிவுபடுத்த முடியும் என்று நானாட்டான் பிரதேசசபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு பிரதேசசபையின் செயற்பாட்டுக்கான புள்ளியிடலில் நானாட்டான் பிரதேச சபையானது 766 புள்ளிகளைப் பெற்று அடைவுமட்டக்குழு 01 இல் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் காரணமாக 35 மில்லியன் நிதி நானாட்டான் பிரதேச சபைக்கு வழங்கப்படவுள்ளது. இந்த நிதியை நானாட்டான் பிரதேச உள்ளக அபிவிருத்திக்குப் பயன்படுத்தவுள்ளோம் - என்றார். (ஒ-14-213-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்வேறு திருட்டுகள் சந்தேகநபர் கைது!

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவிப் பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் திருடப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து தொலைக்காட்சி பெட்டி, டிஷ் அன்டனா செட், பற்றரி, தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள் இரண்டு மற்றும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் வயர் உள்ளிட்ட பொருள்களுடன் 55 கிராம் கேரளக் கஞ்சாவையும் பொலிஸார் மீட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை மின்சாதனப் பொருள்கள் உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்யும்போது மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் பலர் கொள்வனவு செய்த பொருள்கள் களவாடப்பட்ட பொருள்களென கண்டறியப்பட்டுள்ளன என்றும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். (ச-113)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- சாரதி (Driver)
- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் (17.12.2022) சனிக்கிழமை, 19.12.2022 திங்கட்கிழமை ஆகிய நாட்களில். மு.ப. 9.00 - 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 01 . 1935



இறப்பு 14 . 12 . 2022

### திரு. சதாசிவம் மகிழ்ராஜா


(ஓய்வு பெற்ற ஆசிரியர். இயக்குனர் - NPS Equipment (Pvt) Ltd.)

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு B Block அன்டர்சன் தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் மகிழ்ராஜா அவர்கள் 14.12. 2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலம் சென்ற திரு. திருமதி சதாசிவம் அவர்களின் பாசமிகு மகனும்.காலம்சென்ற திரு. திருமதி துரைரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும். நிமலஞானியின் ஆசைக் கணவரும்.திருமதி செல்வராணி. காலம் சென்றவர்களான நவராணி மற்றும் மனோகரன். திரு ஞானசேகரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும். சுபோஷணி (கொழும்பு). நிமாலினி (UK). ஞானா (UK) ஆகியோரின் அன்புத்தந்தையும்.நெல்சன் (கொழும்பு). வசந்தன் (UK). சுதர்ஷன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். மில்கா. மிரியம். சன்ஜிட். மிஷேலா. ஹனா. ரொனி. ஓபேத் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.அன்னாரின் பூதவுடல் A. F. Raymonds மலர்சாலையில் சனிக்கிழமை 17.12.2022 காலை 9 மணி தொடக்கம் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதி ஆராதனை மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்படும். ஞாயிறு 18.12.2022 காலை 8:30 மணி முதல் White House இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 11 மணிக்கு ஆராதனை நடைபெற்று. ஏழாலை தெற்கு CACM சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயருடன் அறியத்தருகிறோம்.

தகவல்: குடும்பத்தினர் 0772980683 / 0770461433

## 31ம் நாள் திருவடிப்பேற்று வழிபாட்டு (வீட்டுக்கிருத்தியம்) அழைப்பும் நன்றி நவிலலும்

சிவபூமியில் 04 . 10 . 1948



சிவபுரத்தில் 16 . 11 . 2022

கடந்த 16-11-2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### சிவத்திரு கந்தையா பத்மநேசன்

(ஓய்வுநிலை இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர் )

அவர்களின் திருவடிப்பேற்று வழிபாடுகள் **இன்று (16.12.2022) வெள்ளிக்கிழமை** காலை நீத்தாரின் இல்லத்தில் இடம்பெற்று. தொடர்ந்து **நண்பகல் 12.00 மணியளவில் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில்** நடைபெறவிருக்கும். இறையடி எய்தும் ஆருயிர் அமைதிபெற நடைபெறும் வழிபாட்டிலும், மதியபோசன நிகழ்விலும். தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன். இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று. தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு மெய்யன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவர் இறைபதம் அடைந்த வேளை வருகை தந்து. துயர் துடைத்து. ஆறுதல்கூறித் தேற்றிய. அன்புள்ளங்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும். தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும். மலர்வளையம். மலர்மாலை மற்றும் பதாகைகள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும். பல்வேறு உதவிகளை உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை வழிநடத்திய செந்தமிழாகம அருச்சுனைஞர்களுக்கும் இரங்கலுரை ஆற்றிய அன்பர்களுக்கும் திருவுடல் பேழையை மயானம் வரை சுமந்து சென்ற அன்புள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்திலும். தகனக்கிரியையிலும் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் நினைவு மலருக்கு ஆக்கங்களை எழுதியோருக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார். உறவினர். அயலவர். நண்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குளங்கரை வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 - 05 - 1967



இறப்பு 09 - 12 - 2022

### திருமதி சாரதா விக்னேஸ்வரன்

யாழ். கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதா விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த (09.12.2022) வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா- சின்னதங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், சந்தியா, வினோஜ், சங்கவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சண்முகபாலன் (கனடா), சறோயாதேவி (பிரான்ஸ்), சுசீலாதேவி (ஜேர்மனி), வரலக்சுமி (கோண்டாவில்), செல்வகுமார் (பிரான்ஸ்), செல்வகுமாரி (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வகுமாரி, சுலோக்சனா, விக்னேஸ்வரன், குகலோகநாதன், யோகநாதன், கீதாஞ்சலி, ரவீந்திரன், தர்சினி, லோகநாயகி, மோகனதாஸ், கோணேஸ்வரன், லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை 12492 woodbine Avenue, Gormley, Ontario, கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்முகலிங்கம் (பிரான்ஸ்) : 00 33626032904
சண்முகபாலன் (கனடா) : 00 1 437 238 8878
சுசீலாதேவி (ஜேர்மனி) : 00 49 177 5741531
வரலக்சுமி (கோண்டாவில்) : 00 94 77915 3146

தகவல்
குடும்பத்தினர்

(CS 48132) (3/6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### பொன்னையா தெட்சணாமூர்த்தி

திதி : தேய்பிறை அட்டமி



தோற்றம் 30.04.1940 மறைவு 27.11.2021

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் உருவம் எம் கண்முன்னே
தெரிகிறது
கனவுகளாய் தோன்றி கண்கண்ட
தெய்வமாக
தோன்றுகிறீர்கள் - அப்பா
காலனவன் போட்ட கணக்கில்
ஓராண்டு ஆகிவிட்டது.
என்றும் உங்கள் மீது கொண்ட
நினைவலைகள்
காலத்தால் அழியாத
நினைவலைகள் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.

(CS 22218) (3/6)

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மத்திய நிலையங்களை கையகப்படுத்தும் தகவல் பொய்!

## தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மறுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

கலாசார மத்திய நிலையங்களை சுவீகரிக்க, தொல்லியல் திணைக்களம் முயற்சி செய்கின்றது என்று குற்றஞ்சாட்டப்பட்ட செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

'வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள கலாசார மத்திய நிலையங்களைச் சுவீகரிக்க தெற்கு தீவிர முயற்சி' என்று வெளியான ஊடகச் செய்தி தொடர்பில், அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேற்படி பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையங்களுக்கு தொல்லியல் திணைக்களம் நிதி வழங்கியதாகவும் குறித்த நிலையங்களை சுவீகரிப்பதற்கு முயற்சிப்பதாகவும் பிரதேச செயலகங்களில் இதுதொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றதாகவும் கூறப்படும் விடயங்கள் முற்றிலும் தவறானதாகும். இவ்வாறான செயற்பாடுகள் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை. கலந்துரையாடல்கள் ஒழுங்குபடுத்தப்படவுமில்லை. இவ்வாறான தவறான வதந்திகளை மக்கள் மனங்களில் பரப்புவதன் நோக்கம் என்ன என்பதை அறியமுடியவில்லை.

மேலும் சங்கானை கலாசார மத்திய நிலையத்தை சுவீகரிப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தீவிர முயற்சியில் ஈடுபடுவதாகவும், இதற்கு முன்பு ஒரு கூட்டம் நடைபெற்றதாகவும் மற்றொரு கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கலாசார மத்திய நிலையம் தொடர்பான ஒன்றுகூடல்களோ அல்லது முயற்சிகளோ தொல்லியல் திணைக்களத்தால் இதுவரை காலமும் நடத்தப்படவோ திட்டமிடப்படவோ இல்லை. கலாசார மத்திய நிலையங்களை சுவீகரிப்பதாகக் கையகப்படுத்துவதாக வெளிவந்த தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பாகவும் திணைக்களத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாகவும் உள்ளன. நடைபெறாத ஒரு விடயத்துக்குத் திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தியமை கண்டிக்கவேண்டிய விடயமாகும். தொல்லியல் திணைக்களமானது இனம், மொழி, மதம் பேதமின்றி புராதன எச்சங்களைப் பாதுகாத்து எதிர்வரும் சந்ததியினருக்கும் கையளிக்கும் உன்னத பணிகளையே மேற்கொண்டுவருகிறது - என்றுள்ளது.

இது தொடர்பில் சங்கானை பிரதேச செயலரைத் தொடர்புகொண்டபோது, சங்கானைப் பிரதேச கலாசார மத்திய நிலையத்துக்கும் தொல்லியல் திணைக்களத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. இது ஒரு தவறான விடயம். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் காணி பயன்பாட்டுக்குழு தொடர்பானதாகும். சங்கானைப் பிரதேச கலாசார மத்திய நிலையம் அமைந்துள்ள காணி, கலாசார மத்திய நிலையத்துக்குக் கொடுப்பது என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு கலாசார திணைக்களத்தின் ஊடாக அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு கலாசார மத்திய நிலையம் பெறப்பட்டது. தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக இதற்கான நிதி பெறப்படவில்லை. அத்துடன் கலாசார மத்திய நிலையத்தை தொல்லியல் திணைக்களத்துக்கு கொடுப்பது என்று சொல்வதே பொய்யான தகவல்.

ஒவ்வொரு முறையும் கட்டடம் கட்டிய பின்பு அந்தந்த திணைக்களங்களுக்கு கட்டடங்களை வழங்கி விடுவது எமது நடைமுறை.

இதற்கான கூட்டம் நடைபெறும் பொழுது தங்களுடைய நிலம் என்று கூறுகின்ற பிரதேசசபைத் தவிசாளர் ஏன் அதை விட்டுவிட்டு இருந்தார். கலாசார மத்திய நிலையம் அமைந்துள்ள காணி பிரதேசசபையினுடையது என்றால் அதற்கான ஆவணத்தைசமர்ப்பிக்குமாறு பிரதேசசபை தவிசாளரிடம் கோரியிருந்தோம். எனினும் தவிசாளர் அதைக் கையளிக்கவில்லை. ஆவணம் கையளிக்கப்படாத நிலையிலே கலாசார திணைக்களத்துக்கு கையளிக்கப்படவிருந்தது. இப்பொழுது தொல்லியல் திணைக்களத்துக்கு வழங்கவிருப்பதாக தவறான தகவல் அளிக்கப்பட்டதால் கலாசாரத் திணைக்களத்துக்கு வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம் - என்றார்.

(அ-ம-125)

# கடலட்டைப்பண்ணை கடல்சார் அரசியலே

## புவியியற்றுறை பேராசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

கடலட்டைப் பண்ணைகளை பொருளாதார அபிவிருத்தியாகப் பார்க்க முடியாது. மாறாக இது ஒரு கடல்சார் அரசியலே என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி அன்ரனிராஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு பொருளாதாரத் திட்டமும் உள்ளூர் மக்களுடனும் பொதுக் கட்டமைப்புக்களுடனும் ஆய்வு நிறுவனங்களுடனும் இணைந்தே மேற்கொள்ளபடும். சர்வதேசத்தில் அபிவிருத்தியைச் சிறந்த முறையில் முன்னெடுக்கும் பல நாடுகளில் இதுதான் நடைமுறை. ஆனால், இலங்கையில் கடலட்டை அமைக்கப்பட்ட விடயத்தில் அவ்வாறான காத்திரமான நடவடிக்கைகளைக் காணமுடியாதுள்ளது.

கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும்போது எத்தகைய ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன? எவரின் கருத்துக்கள் கேட்கப்பட்டன? யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சேவை இந்த அபிவிருத்தி விடயங்களில் உள்வாங்கப்படுகின்றதா? உள்ளிட்ட கேள்விகள் அடிக்கடி எழுகின்றன.

ஒரு திட்டம் முன்னெடுக்கப்படும் பின்னர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறும். இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றபோதுதான் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பிலேயே தெரிய வரும். இவ்வாறுதான் இங்கு அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகளும். இந்தக் கடலட்டைப் பண்ணைகளானவை அபிவிருத்தியாக அல்லாமல் கடல்சார் அரசியல் விடயமாகத்தான் இருக்கின்றது - என்றார்.

(ம-125)

### முப்படையினர்...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐஸ் போதைப்பொருள் உட்பட அபாயகரமான போதைப்பொருள் பாவனை பாடசாலை மாணவர்களுக்கு இடையே தீவிரமாகப் பரவியிருக்கும் நிலையில், பாடசாலை மாணவர்களை போதைக் கலாசாரத்தில் இருந்து மீட்டு வருவதற்காக தேசிய ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஜனவரி மாதம் 2ஆம் திகதி தொடக்கம் தேசியரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் முப்படையினரை ஒன்றிணைத்து தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும். கடுமையான தீர்மானங்களை எடுக்காவிட்டால் மாணவர்களின் எதிர்காலம் சீரழிந்து போகும் - என்றார்.

(அ-ம)

### பங்காளிகளுடன்...

பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்தே இந்த முடிவு எடுக்கப்படும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் தெரிவித்தார். நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனித்தனியாகப் போட்டியிடும் முடிவு தமிழரசுக் கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. தனித்தனியாகப் போட்டியிட்டால் சில இடங்களில் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்யலாம். விகிதாசார முறைமையில் தனித்தனியாக அல்லது ஒன்றுசேர்ந்து போட்டியிட்டால் இருக்கும் சாதக,பாதக அம்சங்களை தொழில்நுட்ப ரீதியாக பகுப்பாய்வு செய்து அதற்கேற்ப இந்த முடிவு எடுக்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்தின் தரப்பில் தற்போது எந்தச் சட்டச்சிக்கல்களும் இல்லை. அதுபோல் மாகாண சபைத் தேர்தலையும் விரைந்து நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(அ-ம-125)

### மடிச்சுக்கட்டியின்...

தேவி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் சமீப நாள்களாக அதிகரித்துள்ளது. தற்போதைய கால நிலையும் இந்த நோய்ப் பரவலின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது. விவசாயிகள் சரியான கட்டுப்பாடுகளை உரிய நேரத்தில் பின்பற்றுவதன் மூலம் மடிச்சுக்கட்டியின் தாக்கத்திலிருந்து தமது பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மடிச்சுக்கட்டி நோய் நிலைகளை ஏற்படுத்தும் குடம்பிடியானது நீளப்பாடாக இலைகளை மடித்து இலைகளின் உள்ளே இழையங்களை அராவி உண்ணும். இதனால் இலைகள் வெள்ளை நிறமாகி மடிந்தும் உலர்ந்தும் காணப்படும். இதனால் இலைகளில் பச்சையம் அகற்றப்படும். இதன் விளைவாக விளைச்சல் பாதிக்கப்படும்.

**தீர்வுகள் என்ன?**

கட்டுப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட அளவில் விதை நெல் பயன்படுத்தல், பரிந்துரைக்கப்பட்ட அளவில் நைதரசன் பசளையைப் பாவித்தல், இரைகௌவிகள் (பறவைகள்) அமர்ந்து குடம்பிகளை உண்பதற்கு வசதியாக ஆங்காங்கே தென்னை மட்டை, கங்கு மட்டை போன்றவற்றை நிலைநிறுத்தி வைத்தல் என்பவற்றை பின்பற்றுவதன் மூலமும் இரசாயனக் கட்டுப்பாடுகளாக [illegible] 50 கிராமுக்கு - 200 மில்லி லீற்றர் (ஒரு ஏக்கர்) அல்லது குளோரன்ரனிலிபுறோல் 20 வீதம் தயோமெதொக்சாம் 20 வீதம் என 40 கிராம் (ஒரு ஏக்கர்) நெபியுபெதனோசயிட் 200 கிராம் வீதமும் (ஒரு ஏக்கர்) பாவிப்பதன் மூலமும் மடிச்சுக்கட்டி தொற்றுக்குத் தீர்வைக் காணமுடியும் - என்றார்.

(அ-ம-20)

### அரசமைப்புப்...

போதும் உடன்பாடில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு-கிழக்கு சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களை வழங்குமாறும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(அ-ம)

### விபத்தில்...

மடைந்தவராவார்.

குறித்த இளைஞன் பேருந்தில் இருந்து இறங்கி நடந்துசென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த இளைஞன் நோயாளர் காவுவண்டி மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-ம-27)

### கசிப்புக்...

குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நான்கு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர்கள் பொலிஸாரைக் கத்தியால் வெட்டுவதற்கு முயற்சித்ததுடன் கல்லால் எறிந்து தாக்குதலும் நடத்தியுள்ளனர். இதையடுத்துக் கூடுதலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மீதும் சந்தேகநபர்கள் கல்லெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். பொலிஸ் அதிகாரியொருவர் இந்தத் தாக்குதலில் காயமடைந்தார். சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் அவர்கள் தீவிரமாகத் தேடப்பட்டு வருகின்றனர்.

(அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்தல் மூலம் நத்தாரைக் கொண்டாடுங்கள்

உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்கள், இந்த வருட நத்தார் கொண்டாட்டங்களை பொருளாதாரம் நலிவடைந்தோருக்குப் பகிர்ந்து வழங்கி அர்த்தமுள்ள வகையில் கொண்டாட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் பாப்பரசர் பிரான்ஸிஸ். (ம)


### கட்டடம் வாடகைக்கு

யாழ். நகரில் 4 பெரிய Hall, 8 அறைகள், 5 குளியலறை, 5 மலசலகூடம் மோட்டார் சைக்கிள் தரிப்பிட வசதிகள் கொண்ட கட்டடம் வாடகைக்கு. நிறுவனங்கள், அலுவலகங்கள் நடத்துவதற்கு உகந்தது.

No. 372 பாங்சல் வீதி,
யாழ்ப்பாணம்
(Near St.Patrick College)
தொடர்பு: 077 979 5591

(CS 48130)(3/6)

### காணி விற்பனைக்கு

நீர்வேலி கரந்தன் பகுதியில் இராஜ வீதிக்கு அண்மையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு.

077 60 111 35

### வெள்ளி 2 :1 இலவசம்

அப்பம், மதிய சைவ உணவு

யாழ் பாடி விடுதி / உணவகம்
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
+94 21 222 6868, +94 77 734 0026 (CS 22245) (3/6)

### வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, மூன்றாம் கட்டையில் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு.

T.P :077 175 0746

(CS 22238) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி** பகுதியில்
**54 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

**தொடர்பு:- ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**


## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1938



மறைவு 15 . 12 . 2022

### பொன்னன் சுப்பையா

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் சுப்பையா அவர்கள் நேற்று (15.12.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.** **குடும்பத்தினர்.**

(CS 22248) 1-6


## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில்
### 33 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.




**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தொடர்பு:- ஜெயம்**

**077 98 65 457**
**077 81 47 389**

(CS 22249) (1/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.